# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## மானியக் கோரிக்கை எண்.17

அறிவிப்புகள்

**2017 – 2018**

**ஓ.எஸ்.மணியன்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**

# கைத்தறி மற்றும்
# துணிநூல் துறை

## 1 தேசிய கைத்தறி தினம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கொண்டாடப்படும்

கைத்தறி இரகங்களை பிரபலப்படுத்தி, நெசவாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், மூன்றாவது தேசிய கைத்தறி தினம் **07.08.2017** அன்று மாநிலத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. விழாவின் ஒரு பகுதியாக அனைத்து மாவட்டங்களிலும் கைத்தறி கண்காட்சிகள் நடத்தப்பட்டு மாவட்ட அளவில் சிறந்த கைத்தறி நெசவாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. மேலும், மாநில அளவில் தேசிய கைத்தறி கண்காட்சியும், கைத்தறி ஆடை அலங்கார அணிவகுப்பும் நடைபெறவுள்ளன. இவ்விழாவில், சிறந்த நெசவாளர்களுக்கும், சிறந்த கைத்தறி இரகங்களை அதிகம் வாங்கி கைத்தறி

உற்பத்தியை ஊக்குவித்த புரவலர் நிறுவனங்களுக்கும், விருதுகள் வழங்கப்படும். இவ்விழாவினை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அரசு, **1** கோடியே **50** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| | |
|---|---|
| **2** | **கைத்தறி இரகங்களை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்ய 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இயக்குநரகத்தில் கைத்தறி விற்பனை மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்படும்** |

மாறிவரும் சந்தை நிலவரங்களுக்கேற்ப கைத்தறி இரகங்களை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இயக்குநரகத்தில், கைத்தறி விற்பனை மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்படும்.

| | |
|---|---|
| **3** | **கைத்தறி நெசவாளர்கள் பல்வேறு சேவைகளை இணைய தளத்தின் மூலம் பயன்பெறும் வகையில் முக்கிய கைத்தறி குழுமங்களில் 98 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் அமைக்கப்படும்** |

கைத்தறி நெசவாளர்கள், ரயில் மற்றும் பஸ் கட்டணத்தை இணைய தளத்தில் செலுத்தி பயணச்சீட்டு பெறுதல், மின்வாரிய கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துதல், காப்பீட்டுத் தொகை மற்றும் காப்பீட்டினை புதுப்பித்தல், கைப்பேசி/தகவல் அட்டை மீள்நிரப்புதல், கைப்பேசி கட்டணம் செலுத்துதல் போன்றவைகளை உடனுக்குடன் செலுத்தி பயன்பெறும் வகையில், முக்கிய கைத்தறி குழுமங்களில், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 98 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் அமைக்கப்படும்.

| | |
|---|---|
| **4** | **தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவிற்கு (Technical Textiles) சிறப்பு கவனம் செலுத்த 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்** |

ஜவுளித் துறையில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப ஜவுளி பிரிவிற்கு சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் திறன் வளர்ச்சித் திட்ட நிகழ்ச்சிகளும், கருத்தரங்கங்களும் நடத்தப்படும். தொழில்நுட்ப ஜவுளி உற்பத்திக்கான சந்தை வாய்ப்புகளை கண்டறிய புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேற்கூறிய பணிகளுக்காக, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

| 5 | **சென்னை மற்றும் கோயம்புத்தூர் லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்** |
|---|---|

தமிழ்நாட்டில் உள்ள 8 லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள் மூலம் கைத்தறி இரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி விற்பனை நிலையங்களின் உள்அலங்கார வேலைப்பாடுகள் மற்றும் தோற்றங்களை மறுசீரமைத்து, வாடிக்கையாளர்களை பெருமளவில் ஈர்க்கவும், கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்கவும், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள் நவீனமயமாக்கப்படும்.

| 6 | **கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலக பயன்பாட்டிற்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய மகிழுந்து வாங்கப்படும்** |
|---|---|

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககத்தின் அலுவலக பயன்பாட்டிற்காக, கழிவு செய்யும் நிலையில் உள்ள மகிழுந்திற்குப் (car) பதிலாக, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 7 இலட்சத்து **50** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய மகிழுந்து வாங்கப்படும்.

| 7 | **கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் கடன் உதவிக்கான நிபந்தனை தற்போதுள்ள 10 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக தளர்வு செய்யப்படும்** |
|---|---|

கைத்தறி நெசவாளர்களை தொடர்ந்து நெசவுத் தொழிலினை மேற்கொள்ள ஊக்குவிக்கும் விதமாகவும், பெருமளவிலான கைத்தறி நெசவாளர்கள் பயனடையவும், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலிருந்து பெறக்கூடிய திரும்பச் செலுத்தப்படாத (Non refundable) கடனைப் பெறுவதற்கு தகுதி பெறும் நிபந்தனையை, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தற்போதுள்ள **10** ஆண்டுகளில் இருந்து **5** ஆண்டுகளாக குறைத்து தளர்வு செய்யப்படும்.

| 8 | **திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி நகரங்களில் உள்ள மூன்று கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்** |
|---|---|

வாடிக்கையாளர்களை கவரும் வகையிலும் அவர்களின் துணித் தேவைகளை கோ–ஆப்டெக்ஸ் மூலம் வாங்கத் தூண்டும் பொருட்டும், விற்பனை நிலையங்களின் ரொக்க விற்பனையை மேம்படுத்தவும், மேலும், துணி விற்பனையில் தனியார் சந்தையில் நிலவும் போட்டியினை எதிர்கொள்ளவும், நடப்பு 2017–2018–ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி நகரங்களில் உள்ள மூன்று விற்பனை நிலையங்கள், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

| 9 | **வாடிக்கையாளர்களுடைய தேவை மற்றும் விருப்பத்திற்கேற்ப சுற்றுச்சூழலுக்கு உகந்த ‘அஹிம்சா பட்டு’ இரகத்தை கோ–ஆப்டெக்ஸால் அறிமுகப்படுத்தப்படும்** |
|---|---|

சந்தையில், தனியார் போட்டியை எதிர்கொள்ளும் பொருட்டு, கோ–ஆப்டெக்ஸ் புதிய கைத்தறி இரகங்களை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** வாடிக்கையாளர்களுடைய தேவை மற்றும் விருப்பத்திற்கேற்ப சுற்றுச் சூழலுக்கு உகந்த **‘அஹிம்சா பட்டு’** இரகம் கோ–ஆப்டெக்ஸால் அறிமுகப்படுத்தப்படும்.

| 10 | **சென்னையில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் "தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை" 2 கோடி ரூபாய் மதிப்பில் கலை நயமிக்க வடிவமைப்புகளுடன் அழகுற நவீனமயமாக்கப்படும்** |
|---|---|

சென்னை எழும்பூரில், தற்போது இயங்கிவரும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், தமிழ்நாட்டின் அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1982–ஆம் ஆண்டு "தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை" என பெயரிடப்பட்டு துவக்கி வைக்கப்பட்டது. கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில், தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகையில் செயல்பட்டு வரும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் மிகவும் பழமையான மற்றும் முக்கியமான விற்பனை நிலையங்களில் ஒன்றாகும். இந்த விற்பனை நிலையமானது, **இதயதெய்வம்**

**மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடி ரூபாய் மதிப்பில் கலைநயமிக்க வடிவமைப்புகளுடன் அழகுற நவீனமயமாக்கப்படும்.

| 11 | **இயற்கை சாயமிடப்பட்ட பருத்தி சேலை இரகங்கள் திண்டுக்கல், கோயம்புத்தூரில் உள்ள வதம்பச்சேரி மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள மணமேடு ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்களால் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உற்பத்தி செய்யப்படும்** |
|---|---|

கோ–ஆப்டெக்ஸ், திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய பல்கலைக் கழகத்துடன் இணைந்து, இயற்கை சாயங்களை பயன்படுத்தி உடலுக்கு ஊறு விளைவிக்காத வகையில் பருத்தி இரக சேலைகள் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இந்த இயற்கை சாயமிடப்பட்ட பருத்தி இரக சேலைகள், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** திண்டுக்கல், கோயம்புத்தூரில் உள்ள வதம்பச்சேரி மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மணமேடு ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்களால் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உற்பத்தி செய்யப்படும்.